රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. RG/AB/01/சுற்றறிக்கை மற்றும் அலுவலக

ප්‍රධාන කාර්යාලය / தலைமை அலுவலகம் / HEAD OFFICE

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. 565

ඔබේ අංකය / உமது இல. / Your No.

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.

දිනය / திகதி / Date 2022.08.18


சுற்றறிக்கை இல : 13/2022

தலைமை அலுவலகத்தின் சகல பிரிவுகளுக்கும் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர்கள்,
மத்திய பதிவு அறை / மாகாண பதிவு அறை உதவி பதிவாளர் நாயகங்கள்,
வலய பொறுப்பு பிரதி/ உதவி பதிவாளர் நாயகங்கள்,
மாவட்ட பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கள்,
காணிப் பதிவாளர்கள்,
சகல பிரதேச செயலகங்களின் மேலதிக மாவட்ட பதிவாளர்கள்,

**மின்னஞ்சலைப் பயன்படுத்துதல்**

பதிவாளர் நாயக திணைக்களம் இது வரையிலும் கடித தொடர்புகளை அதிக அளவில் தபால் மூலம் மேற்கொண்ட போதிலும், கடமைசார் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்படும் போது தாமதங்கள் ஏற்படுவது போன்று தொலைந்து போகும் சந்தர்ப்பங்களையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அந்த நிலைமையை தவிர்ப்பதற்கு மின்னஞ்சல் பாவனை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கமைவாக, 2022.09.01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கடித தொடர்புகளை மின்னஞ்சலினூடாக மேற் கொள்ளுதல் ஒரு முன்னோடி கருத்திட்டமாக சட்டரீதியாக இடம்பெறுகின்றது என்பதையும், இதனுடன் உள்ள **இணைப்பு இல 01** இல் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிகளை பயன்படுத்துவதற்காக குறித்து வைத்துக் கொள்ளுமாறும் அறிவிக்கின்றேன்.

03. LGN WIFI ஊடாக அரசாங்கத்தின் மின்னஞ்சலுக்குள் உட்பிரவேசிப்பதற்கான பயனர் வழிகாட்டி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக இதனுடன் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தி E-mail முகவரிகளுக்கு உட்பிவேசிப்பதற்கும் உரிய E-mail பரிமாற்றங்களை மேற்கொள்ளவும் முடியும்.

- ✓ இலங்கை தொலை தொடர்பு வலையமைப்பினை பயன்படுத்தி E-mail தொடர்புகளை மேற் கொள்ள முடிவதோடு https://lgn.gov.lk/owa/URL ஊடாக E-mail முகவரிக்கு உட்பிரவேசிக்க (Log in) முடியும்.
- ✓ கணக்கிற்குள் உட்பிரவேசிப்பதற்காக (Log in) இதற்கு முன்னர் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் (User Name) மற்றும் கடவுச் சொல்லை (Pass Word.) பயன்படுத்த முடியும்.
- ✓ E-mail தொடர்புகளுக்காக மேற் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக முதன் முறையாக உட்பிரவேசிக்கும் பொழுது உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொது கடவுச் சொல்லினை (Pass Word) மாற்றிக் கொள்ள முடியும்.
- ✓ E-mail லினை அனுப்பும் பொழுது To இல் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு மேலதிகமாக Cc இல் உங்களின் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி ஒன்றினை குறிப்பிடுவதன் ஊடாக நீங்கள் அனுப்பிய தகவல் சரியாக Send ஆகி விட்டதா என்பதனை உறுதிபடுத்திக் கொள்ள முடியும்.
- ✓ நீங்கள் அனுப்பும் E-mail களில் அவசியமற்ற தகவல்களை அனுப்புதல் அல்லது கிடைத்த தகவல்களை ஒரு மாதத்திற்கு ஒரு முறையேனும் அகற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

04. E-mail முகவரிகளின், கடவுச் சொல் (Pass Word) அல்லது வேறு ஏதேனும் தொழில்நுட்ப கோளாறுகளுக்கு இலங்கை தொலை தொடர்பு வலையமைப்பின் 0112497900 இலக்கத்தினை தொடர்பு கொண்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

05. பயன்படுத்தும் போது எழுகின்ற தொழில்நுட்ப பிரச்சினைகள் தொடர்பாக தகவல் தொழில்நுட்ப பிரிவினை தொடர்பு கொண்டு தேவையான வசதிகளை பெற்றுக் கொள்ளுமாறும், தகவல் படிவம் **இணைப்பு 2** இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுகமைவாக மின்னஞ்சலினை பயன்படுத்துமாறும், நாளாந்த மின்னஞ்சல் நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தருக்கு கடமை பொறுப்பினை ஒப்படைக்குமாறும் இதன் மூலம் மேலும் அறிவிக்கின்றேன்.

பீ.எஸ்.பீ.அபேவர்தண

பதிவாளர் நாயகம்

பதிவாளர் நாயகம் திணைக்களம்